# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 28–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**I.A. No. 08 of 2025 in O.S. No. 205 of 2004**
**(CNR No. TNSA13-000063-2004)**

T.S. பாலு,
தனம் என்பவருக்காக பொது அதிகார முகவர் .. மனுதாரர் / வாதி

எதிராக

1. T.P. முருகேசன் (இறந்தவர்)
2. புவனேஸ்வரி
3. இந்திராணி (இறந்தவர்)
4. கருணாகரன் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 25.10.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுரேஷ் அவர்களும், 1, 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் காலமாகிவிட்ட நிலையில், 2–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. K. பொன்மணி மற்றும் திரு. K. மோகனசுந்தரம் அவர்களும்

*.. 2 ...*

ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவுரை**

மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** மனுதாரர் / வாதி இவ்வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 1–ம் பிரதிவாதி உயிருடன் இருந்ததாகவும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளை 2 முதல் 4 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டதாகவும், வழக்குரை பத்தி எண்.3 முதல் 6–ல் 1–ம் பிரதிவாதி என்று குறிப்பிடப்படாமல் பிரதிவாதி என்றே தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தவறை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், வழக்குரையின் பரிகார பத்தியில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் சரியாக கோரப்படவில்லை என்றும், வாதி கடந்த 16.02.1996 அன்று 1–ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதையும், அதை 1–ம் பிரதிவாதி கடந்த 19.02.1996 அன்று பெற்றுக்கொண்டதையும் முறையாக வழக்குரையில் முன்வைக்கப்படவில்லை என்றும், இதுகுறித்து வாதிக்கு சாட்சிய பிரமாண வாக்குமூலம் தயார் செய்யும்போதுதான் தெரிய வந்ததாகவும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

.. 3 ...

3. **<u>2–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** மனுவில் கூறியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். மேலும், இந்த எதிர்மனுதாரர், மனுதாரர் / வாதி மீதும், இதர எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீதும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.121/1996 என்ற வழக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கில் கடந்த 16.04.1996 அன்று முதல்நிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்க வேண்டி இந்த எதிர்மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், ஆள்வரையறை காரணமாக மேற்படி வழக்கு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.78/1998–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணைக்காக நிலுவையில் இருந்த சமயத்தில் மீண்டும் ஆள்வரையறை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.222/2006–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இ.ம.வ.எண்.629/2006–ல் கடந்த 19.10.2006 அன்று இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து இந்த எதிர்மனுதாரரால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு இ.பி.எண்.85/2007–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி அசல் வழக்கில் இந்த 2–ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துதான் இந்த அசல் வழக்கின் சொத்து என்றும், மனுதாரர் கடந்த 1999–ம் ஆண்டு இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் 3–ம் எதிர்வாதியாக சேர மனு தாக்கல் செய்ததாகவும், அதனை தொடர்ந்து முதல்நிலை தீர்ப்பாணை இரத்து செய்ய மனு தாக்கல் செய்ததாகவும், இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்த அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரே இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், இதனை தொடர்ந்து மனுதாரர் மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.14/2007 என்ற மேல்முறையீட்டு வழக்கை

*.. 4 ...*

தாக்கல் செய்து கடந்த 01.08.2008 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், எவ்வித முகாந்திரமும் இல்லாமல் போலியாக ஒரு ஆவணத்தை தயாரித்து இந்த எதிர்மனுதாரரின் தகப்பனாரான 1–ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து வழக்காடி வருகிறார் என்றும், மனுதாரர் நிறைவேற்று மனுவில் தொடர்ந்து மனுக்களை தாக்கல் செய்து தீர்ப்பின் பலனை அனுபவிக்க விடாமல் 2–ம் எதிர்மனுதாரரை துன்புறுத்தி வருகிறார் என்றும், ஏற்கனவே பாகப்பிரிவினை சம்பந்தமாக எதிர்மனுதாரர்களுக்குள் வழக்கு நடந்து வரும் நிலையில், அதை பற்றி குறிப்பிடாமல் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், நிறைவேற்று மனு நிலுவையில் இருப்பதால் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரருக்கு எவ்வித தீர்ப்பும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

***மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?***

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர் / வாதி தன்னுடைய மனுவில், வழக்குரை பத்தி எண்.3 முதல் 6–ல் 1–ம் பிரதிவாதி என்று குறிப்பிடப்படாமல் பிரதிவாதி என்றே தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்குரையின் பரிகார பத்தியில்

ஏற்றதை ஆற்றுக பரிகாரம் சரியாக கோரப்படவில்லை என்றும், வாதி 1–ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதையும், அதை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதையும் முறையாக வழக்குரையில் முன்வைக்கப்படவில்லை என்றும், இதுகுறித்து வாதிக்கு சாட்சிய பிரமாண வாக்குமூலம் தயார் செய்யும்போதுதான் தெரிய வந்ததாகவும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

2) மாறாக 2–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய எதிருரையில், மனுதாரர் / வாதி மீதும், இதர எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீதும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.121/1996 என்ற வழக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கில் கடந்த 16.04.1996 அன்று முதல்நிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்க வேண்டி இந்த எதிர்மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், ஆள்வரையறை காரணமாக மேற்படி வழக்கு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, பின்னிட்டு மீண்டும் ஆள்வரையறை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.222/2006–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இ.ம.வ.எண்.629/2006–ல் கடந்த 19.10.2006 அன்று இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து இந்த எதிர்மனுதாரரால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு இ.பி.எண்.85/2007–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், எவ்வித முகாந்திரமும் இல்லாமல் போலியாக ஒரு ஆவணத்தை தயாரித்து இந்த எதிர்மனுதாரரின் தகப்பனாரான 1–ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து வழக்காடி வருகிறார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

.. 6 ...

3) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலிக்கையில், 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மனுவில் கண்ட 1–வது திருத்தம் அவசியமானதாகும். மேலும், இந்த வழக்கை மனுதாரர் / வாதி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்வதால் இந்த வழக்கின் தன்மை மாறாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் மனுதாரர் / வாதியின் வழக்கிற்கு அவசியம் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

4) மனுதாரர் / வாதி செலவுத்தொகையாக ரூ.1,000/–ஐ எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு 30.10.2025–ற்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

7. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 28–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.10.28 18:33:37 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 7 ...*

<u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.10.28 18:33:46 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.,) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 08/2025**

**----------------**

**அ.வ. எண் 205/2004**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 28.10.2025

இ.ம.வ. எண் 08/2025 **in** அ.வ.எண்.205/2004